# TNPSC GROUP I / II - PRELIMINARY
# INDIAN POLITY

**நிர்வாக சீர்த்திருத்தங்கள், தீர்ப்பாயங்கள், பொது வாழ்வில் ஊழல், ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகள், மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையம், லோக் அதாலத், ஆம்புட்ஸ்மேன், இந்திய தலைமைக்கணக்கு தணிக்கை அதிகாரி, தகவல் அறியும் உரிமைச்சட்டம், மத்திய மற்றும் மாநில தகவல் ஆணையம்**

1. **லோக்பால்**
2. **லோக் ஆயுக்தா**
3. **மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையம்**
4. **மத்திய புலனாய்வு துறை**
5. **ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநரகம்**
6. **தலைமை கணக்கு தணிக்கையாளர்**
7. **லோக் அதாலத்**
8. **தகவல் அறியும் உரிமை சட்டம்**
9. **தேசிய புலனாய்வு முகமை**
10. **நிர்வாக தீர்ப்பாயங்கள்**
11. **நிர்வாக சீர்த்திருத்தங்கள்**

## பொது வாழ்வில் ஊழல்

## I. வரையறை

1. 'Corruption' (ஊழல்) என்ற சொல் 'உடைத்தல்' என்ற பொருள் தரும் 'Corruptus' என்ற இலத்தீன் சொல்லில் இருந்து வந்ததாகும்.

2. ஊழல் என்றால் என்ன?
   ஊழல் என்பது நெறிமுறையற்ற நடத்தையைக் குறிக்கிறது. இது பொது அல்லது நிறுவன அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்துவதன் மூலம் வகைப்படுத்தப்படுகிறது. இது நிறுவனங்களுக்கு மட்டுமல்ல, சமூகத்திற்கும் தீங்கு விளைவிக்கும்.

3. இருப்பினும் ஊழல் என்ற சொல் தற்கால சூழ்நிலையில் நன்னெறி, ஒழுக்கம், பாரம்பரியம், சட்டம் போன்றவற்றில் இருந்து விலகிச் செல்லும் குணத்தைக் குறிப்பிடுகிறது.

4. இது பொதுவாக, கையூட்டு, ஏமாற்றுதல், கையாடல், மிரட்டி பணம் பறித்தல், தனிச்சலுகை போன்றவற்றை உள்ளடக்கியதாகும்.

## II. இந்தியாவில் ஊழலுக்கான காரணங்கள்

### 1. நிர்வாகம்

i. காலனித்துவ அதிகாரத்துவம்

ii. தோல்வியுற்ற நிர்வாக சீர்திருத்தங்கள்

iii. நீதித்துறை தோல்வி – தாமதங்கள் மற்றும் நிலுவைகள்

iv. குறைகளை தீர்க்கும் பயனுள்ள வழிமுறைகள் இல்லை

### 2. அரசியல்

i. தேர்தலில் கருப்பு பணம் பயன்படுத்தப்படுகிறது.

ii. அரசியலை குற்றப்படுத்துதல்

## III. ஊழலின் தாக்கம்

i. அரசாங்கங்கள் மீது நம்பிக்கை மற்றும் நம்பிக்கையின்மை

ii. சேவைகளில் தரம் இல்லாமை

**இந்திய ஊழல் தடுப்பு அமைப்புகள்:**

❖லோக்பால்

❖லோக் ஆயுக்தா

❖CBI

❖மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையம்

❖மத்திய தகவல் ஆணையம்

❖லஞ்ச ஒழிப்பு மற்றும் ஊழல் எதிர்ப்பு இயக்குநர்

❖இந்திய தலைமைக் கணக்கு தணிக்கை அதிகாரி

**லோக்பால் மற்றும் லோக் ஆயுக்தா**

**தோற்றம்**

**குடிமக்கள் சாசனம் (Citizen charter):** முதன்முதலில் 1991 இல் இங்கிலாந்தில் ஜான் மேயரால் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்தியாவில் இது 1997 இல் அறிமுகப்படுத்தப்பட்டது

**ஊழல் தடுப்பு குழு:** சந்தானம் குழுவின் (1962-64) பரிந்துரை

உலகின் பல்வேறு பகுதிகளில் குறைகளைத் தீர்ப்பதற்காக உருவாக்கப்பட்ட நிறுவன சாதனங்கள்

- ❖ ஒம்புட்ஸ்மேன் அமைப்பு
- ❖ பிரான்சில் நிர்வாக நீதிமன்றங்கள் அமைப்பு
- ❖ USSR இல் குற்றநடுவர் அமைப்பு

**ஓம்புட்ஸ்மேன் அமைப்பு**

- ❖ இந்த அமைப்பு (Ombudsman) முதலில் ஸ்வீடனில் 1809 நிறுவப்பட்டது

- ❖ 'Ombud' என்பது ஒரு ஸ்வீடன் சொல். இது ஒரு நபரின் பிரதிநிதியாக அல்லது செய்தித் தொடர்பாளராக செயல்படும் நபரைக் குறிக்கிறது. 1962 ஆம் ஆண்டில் ஒம்புட்ஸ்மேன் முறையை ஏற்றுக்கொண்ட உலகின் முதல் காமன்வெல்த் நாடு நியூசிலாந்து ஆகும். இந்தியாவில் ஒம்புட்ஸ்மேன் லோக்பால் / லோக்ஆயுக்தா என்று அழைக்கப்படுகிறது. இந்தியாவில் நியூசிலாந்து மாதிரியான ஒம்புட்ஸ்மேன் முறை பின்பற்றப்படுகிறது.

- ❖ ஒம்புட்ஸ்மேன் நிறுவனம் அதிகாரப்பூர்வ கொடுங்கோன்மைக்கு எதிரான மக்களாட்சி அரசாங்கத்தின் அரண் என்று சி. ரோவட் கூறுகிறார், ஜெரால்ட் ஈ. கெய்டன் அதை நிறுவனமயமாக்கப்பட்ட பொது மனசாட்சி என்று விவரித்தார்.

- ❖ இந்தியாவின் முதல் நிர்வாக சீர்திருத்த ஆணையம் (ARC) (1966-1970) குடிமக்களின் குறைகளைத் தீர்ப்பதற்காக 'லோக்பால்' மற்றும் 'லோக்ஆயுக்தா' என இரண்டு சிறப்பு அமைப்புகளை அமைக்க பரிந்துரைத்தது. இந்த நிறுவனங்கள் ஸ்காண்டிநேவிய நாடுகளில் உள்ள ஒம்புட்ஸ்மேன் மற்றும் நியூசிலாந்தில் விசாரணைக்கான நாடாளுமன்ற ஆணையரின் அமைப்பு முறையின்படி அமைக்கப்பட பரிந்துரைக்கப்பட்டன. லோக்பால் மத்திய மற்றும் மாநில அளவில் அமைச்சர்கள் மற்றும் செயலாளர்களுக்கு எதிரான புகார்களைக் கையாளும், மேலும் லோக் ஆயுக்தா (ஒன்றியம் மற்றும் ஒவ்வொரு மாநிலத்திலும்) மற்ற குறிப்பிட்ட உயர் அதிகாரிகளுக்கு எதிரான புகார்களைக் கையாளும். நியூசிலாந்தில் உள்ளதைப் போல நீதித்துறையை லோக்பால் மற்றும் லோக் ஆயுக்தாவின் வரம்பிற்கு வெளியே ARC வைத்திருந்தது.

**நிர்வாக சீர்த்திருத்த ஆணையத்தின் பரிந்துரைகள்**

- ❖ இவை சுதந்திரமான நடுநிலை அமைப்புகளாக இருக்க வேண்டும்

- ❖ இவற்றின் நியமனம் முடிந்தவரை அரசியல் சார்ந்ததாக இருத்தல் கூடாது

- ❖ விசாரணைமுறை தனியாக நடத்துதல் வேண்டும் முறைசாராமல் இருத்தல் வேண்டும்

❖ அவர்களின் நிலை நாட்டில் உயர்ந்த நீதித்துறை செயலர்களுக்கு இணையாக இருத்தல் வேண்டும்

❖ அவர்கள் அநீதி ஊழல் பாரபட்சமான செயல்பாடுகள் போன்ற பிரச்சனைகளை விசாரிக்க வேண்டும்

❖ இவர்களின் நடவடிக்கைகளில் நீதித்துறை தலையீடு இருத்தல் கூடாது

❖ தேவையான விவரங்களை அனைத்து நிலைகளிலும் பெறுதல் வேண்டும்

**லோக்பால் வரலாறு:**

1. மே 1968 – காங்கிரஸ் அரசு, இந்திராகாந்தி தலைமை
2. ஏப்ரல் 1971 – காங்கிரஸ் அரசு, இந்திராகாந்தி தலைமை
3. ஜீலை 1977 - ஜனதா அரசு, ராஜீவ்காந்தி தலைமை
4. ஆகஸ்ட் 1985 – காங்கிரஸ் அரசு, ராஜீவ் காந்தி தலைமை
5. டிசம்பர் 1989 – தேசிய முன்னணி அரசாங்கம், V.P. சிங் தலைமை
6. செப்டம்பர் 1996 – ஐக்கிய முன்னணி அரசாங்கம், தேவ கவுடா தலைமை
7. ஆகஸ்ட் 1998 – பி.ஜே.பி. கூட்டணி அரசாங்கம். வாஜ்பாய் தலைமை
8. ஆகஸ்ட் 2001 – தேசிய ஜனநாயகக் கூட்டணி வாஜ்பாய் தலைமை
9. ஆகஸ்ட் 2011 – ஐக்கிய முற்போக்கு கூட்டணி, மன்மோகன் சிங் தலைமை டிசம்பர் 2011

   இது தொடர்பாக இந்திய அரசு ARC-ன் பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டது. இதுவரை, இந்த சட்டத்தை கொண்டு வர பத்து முறை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

10. ஐக்கிய முற்போக்கு கூட்டணி, மன்மோகன் சிங் தலைமை

❖ மேற்கூறிய எந்த மசோதாவும் பல்வேறு காரணங்களுக்காக நிறைவேறவில்லை.

❖ ஜம்மு மற்றும் காஷ்மீரில், இந்த நிறுவனம் மாநில பொறுப்புடைமை ஆணையம் (SAC) என அழைக்கப்படுகிறது.

**லோக்பால் மற்றும் லோக் ஆயுக்தா சட்டம், 2013:**

லோக்பால் மற்றும் லோக் ஆயுக்தா தொடர்பான விதிமுறைகள் 116வது அரசியலமைப்பு திருத்த மசோதாவில் இடம்பெற்றுள்ளன. 2014 ஜனவரி 16 முதல் லோக்பால் மசோதா அமலுக்கு வந்தது. லோக்பால் மசோதா ஜனவரி 1, 2014 குடியரசுத்தலைவரின் ஒப்புதல் பெற்றது.

**அமைப்பு:**

❖ பல உறுப்பினர்களைக் கொண்ட அமைப்பு
❖ தலைவர் + அதிகபட்ச 8 உறுப்பினர்கள்
❖ 50% உறுப்பினர்கள் SC, ST, OBC, சிறுபான்மையினர் மற்றும் பெண்களாகவும், 50% உறுப்பினர்கள் நீதித்துறையைச் சேர்ந்தவர்களாகவும் இருக்க வேண்டும்.

**தலைவர்:**

❖ஓய்வுபெற்ற - இந்திய தலைமை நீதிபதி (அ) உச்சநீதிமன்ற நீதிபதி (அ) ஊழல் ஒழிப்பு கொள்கை, பொது நிர்வாகம், லஞ்சஒழிப்பு, நீதி ஆகியவற்றுடன் தொடர்புடைய துறையில் குறைந்தபட்சம் 25 வருடம் அனுபவம், சிறப்பு அறிவு, தலைசிறந்த பண்பு ஆகியவற்றை பெற்ற சிறந்த நபராய் இருக்க வேண்டும்.

**பதவிக்காலம்:**

❖தலைவர் மற்றும் உறுப்பினர்கள் = 70 வயது (அ) 5 வருடம்

❖ஊதியம் மற்றும் அனைத்து படிகளும் உச்சநீதிமன்ற நீதிபதிக்கு இணையாக இருக்கும்.

**அதிகார வரம்பு**

- ❖ பிரதம மந்திரி (சில பொருள் விலக்கு மற்றும் பாதுகாப்புகளுடன்)
- ❖ மத்திய அமைச்சர்கள்
- ❖ பாராளுமன்ற உறுப்பினர்கள்
- ❖ ஊழல் தடுப்புச் சட்டம், 1988-ன் கீழ் வரையறுக்கப்பட்டுள்ள ‘A’, ‘B’, ‘C’ அல்லது ‘D’ வகுப்பு அரசு ஊழியர்கள்

**அதிகாரங்கள்:**

❖இந்திய புலனாய்வுத் துறை உள்ளிட்ட மத்திய புலனாய்வு அமைப்புகளை மேற்பார்வையிட்டு நெறிப்படுத்துதல்.

❖லோக்பாலின் விசாரணை பிரிவு உரிமையியல் நீதிமன்றத்திற்கான அதிகாரம் பெற்றுள்ளது.

- ❖ ஊழல் வழக்குடன் தொடர்புடைய தேடுதல் மற்றும் பறிமுதல் நடவடிக்கைகளுக்கு சிபிஐக்கு அதிகாரம் அளிக்கும் அதிகாரம்.
- ❖ லோக்பாலுக்கு சிறப்பு சூழ்நிலைகள் மூலம் பெறப்பட்ட சொத்துக்கள், வருமானம், ரசீதுகள் மற்றும் ஊழல் பலன்களை பறிமுதல் செய்யும் அதிகாரங்கள் உள்ளன.
- ❖ முதல்நிலை விசாரணையின் போது பதிவுகள் அழிக்கப்படுவதைத் தடுப்பதற்கான வழிகாட்டுதல்களை வழங்க லோக்பாலுக்கு அதிகாரம் உள்ளது.

- ❖ இது ஊழல் தடுப்புச் சட்டம் 1988ன் கீழ் அதிகபட்ச தண்டனையை 7 ஆண்டுகளில் இருந்து 10 ஆண்டுகளாகவும், குறைந்தபட்ச தண்டனையை 6 மாதங்கள் முதல் 2 ஆண்டுகளாகவும் உயர்த்துகிறது.

- ❖ லோக்பால் மூலம் விசாரிக்கப்படும் அல்லது லோக்பாலின் ஒப்புதலுடன் தொடங்கப்பட்ட வழக்குகளில் வழக்குத் தொடர முன் அனுமதி தேவையில்லை.

**லோக்பால் மற்றும் லோக் ஆயுக்தா சட்டத்தின் (2013) குறைபாடுகள்**

1. லோக்பால் எந்த ஒரு பொது ஊழியர் மீதும் தானாக முன்வந்து நடவடிக்கை எடுக்க முடியாது.
2. புகாரின் பொருளைக் காட்டிலும் வடிவத்தை வலியுறுத்துகிறது.
3. பெயர் தெரியாத புகார்கள் அனுமதிக்கப்படாது.
4. பொய்யான புகார்களுக்கு கடுமையான தண்டனைகள் வழங்கப்படுவதால் புகார்கள் பதிவு செய்யப்படுவதைத் தடுக்கிறது.
5. புகார் அளிக்கப்பட்ட பொது ஊழியருக்கு சட்ட உதவி.
6. புகார்களை தாக்கல் செய்ய 7 ஆண்டுகள் வரம்பு காலம்
7. பிரதமருக்கு எதிரான புகார்களைக் கையாள்வதில் வெளிப்படைத்தன்மையற்ற நடைமுறை.

**லோக்பாலின் செயல்பாடு**

- இது 19 மார்ச் 2019 இல் பினாகி சந்திர கோஸ் தலைமையில் உருவாக்கப்பட்டது.
- இதன் லோகோவை உத்திர பிரதேசம் பிரயாக்ராஜைச் சேர்ந்த பிரசாந்த் மிஸ்ரா வடிவமைத்துள்ளார்.
- இதன் குறிக்கோளுரை "மா க்ரிதஹ் கஸ்யஸ்விதானம்" (சமஸ்கிருதத்தில் யாருடைய செல்வத்திற்கும் பேராசை கொள்ளாதே) என்பதாகும்.

**லோகாயுக்தாக்கள்**

- பல மாநிலங்கள் ஏற்கனவே லோக் ஆயுக்தாக்களை நிறுவியுள்ளன. லோக்ஆயுக்தா நிறுவனம் 1971ல் மஹாராஷ்டிராவில் முதன்முதலில் நிறுவப்பட்டது. ஒடிசா 1970-ல் இது தொடர்பான சட்டத்தை இயற்றியிருந்தாலும், அது 1983ல் தான் நடைமுறைக்கு வந்தது. இது கட்டாயமாகும் வரை (2013), 21 மாநிலங்கள் மற்றும் 1 யூனியன் பிரதேசம் (டெல்லி) லோக்யுக்தாக்களை நிறுவியிருந்தன.
- 1986 ஆம் ஆண்டு, லோக்ஆயுக்தா தொடர்பான மாநிலங்களின் சட்டங்களை சீரமைக்கவும், நிறுவனத்தின் வளர்ச்சிக்காகவும் பரிந்துரைகளை வழங்க சிம்லாவில் லோக்ஆயுக்தா மற்றும் உப-லோக்ஆயுக்தாவின் அகில இந்திய மாநாடு நடைபெற்றது.

**பதவிக்காலம்**

பெரும்பாலான மாநிலங்களில், லோக்ஆயுக்தாவிற்கு நிர்ணயிக்கப்பட்ட பதவிக்காலம் 5 ஆண்டுகள் அல்லது 65 வயது (எது முந்தையதோ) ஆகும். அவர் இரண்டாவது முறையாக மீண்டும் நியமனம் செய்ய தகுதியற்றவர்.

**தமிழ்நாடு லோக்ஆயுக்தா சட்டம், 2018**

- இது ஜூலை 9, 2018 அன்று நிறைவேற்றப்பட்டு நவம்பர் 13, 2018 முதல் நடைமுறைக்கு வந்தது.

**அமைப்பு**

- ❖ தமிழ்நாடு லோக்ஆயுக்தாவில் தலைவர் மற்றும் நான்கு உறுப்பினர்கள் (இரண்டு நீதித்துறையினர்) ஒரு தேர்வுக் குழுவின் பரிந்துரையின் பேரில் ஆளுநரால் நியமிக்கப்படுகிறார்கள். தேர்வுக் குழுவில் முதல்வர், சட்டசபை சபாநாயகர் மற்றும் சட்டசபை எதிர்க்கட்சி தலைவர் ஆகியோர் இருப்பர்.
- ❖ தமிழ்நாடு லோக் ஆயுக்தாவின் முதல் மற்றும் தற்போதைய (2019 முதல்) தலைவர் ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி பி. தேவதாஸ் ஆவார்.

## மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையம் (CVC)

- ❖ இது மத்திய அரசாங்கத்தில் ஊழலைத் தடுக்கும் உயர்ந்த முகமை ஆகும்.
- ❖ 1964ஆம் ஆண்டு நடுவண் அரசின் ஆட்சித் துறைத் தீர்மானத்தின் (Executive Resolution) மூலம் அமைக்கப்பட்டதே மத்தியப் புலனாய்வு ஆணையமாகும். 2003 செப்டம்பர் மாதம் நாடாளுமன்றம் இயற்றிய சட்டத்தின்படி இந்த ஆணையத்துக்கு சட்ட அந்தஸ்து (Statutory) அளிக்கப்பட்டது.

- ❖ இது ஊழல் தடுப்புக்கான சந்தானம் குழுவால் பரிந்துரைக்கப்பட்டது (1962-64). இதன் தலைமையகம் புது தில்லியில் அமைந்துள்ளது.

- ❖ 2004 ஆம் ஆண்டில், மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையம் ஆனது பொது நலன்களை வெளிப்படுத்துதல் மற்றும் தகவல் தருபவர்களின் பாதுகாப்பு (PIDPI) தீர்மானத்தின் கீழ், ஊழல் அல்லது அலுவலகத்தை தவறாகப் பயன்படுத்துதல் தொடர்பான புகார்களை இடித்துரைப்பாளர்களிடமிருந்து பெறவும், நடவடிக்கை எடுப்பதற்கும் இந்த நிறுவனம் நியமிக்கப்பட்டது.

**அமைப்பு:**

- ❖ மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையத்தில் தலைவரும் இரண்டுக்கு மேற்படாத உறுப்பினர்களும் உள்ளனர்.

- ❖ பிரதமர் (தலைவர்), மத்திய உள்துறை அமைச்சர், மக்களவையின் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரைக் கொண்ட மூவர் தெரிவுக் குழுவின் பரிந்துரையின் பேரில் குடியரசுத் தலைவரால் இவர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

- ❖ இந்தியாவின் முதல் மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையர் நிட்டூர் சீனிவாச ராவ் ஆவார்.

**பதவிக்காலம்:**

- ❖ இவர்கள் 4 ஆண்டுகள் அல்லது 65 வயது நிறைவடையும் வரை பதவியில் இருக்கலாம். மத்தியப் ஊழல் கண்காணிப்பு ஆணையர்கள் பதவி ஓய்வு பெற்ற பின்னர் மத்திய மாநிலப் பணிகளில் எந்தப் பதவியையும் வகிக்கக் கூடாது.
- ❖ மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையர்களின் சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் பிற சேவை நிபந்தனைகள் ஒன்றிய அரசுப்பணியாளர் தேர்வாணைய (UPSC) தலைவருக்கு ஒத்ததாகவும் மற்றும் கண்காணிப்பு

ஆணையருக்குரியவை ஒன்றிய அரசுப்பணியாளர் தேர்வாணய உறுப்பினருக்கு ஒத்ததாகவும் இருக்கும்.

**பணிகள்:**

❖ஊழல் தடுப்புச் சட்டம் 1988 கீழ், குற்றம் சாட்டப்பட்ட மத்திய அரசின் அதிகாரிகள் மற்றும் ஊழியர்களை விசாரித்தல்.

❖ஊழல் தடுப்புச் சட்டம் 1988 கீழ், கீழ்க்கண்டவர்களை விசாரிக்க அதிகாரம் பெற்றுள்ளது.

1. அனைத்திந்திய பணிகளில் இருப்பவர்கள் (அ) மத்திய அரசு குரூப் A பிரிவு அலுவலர்கள்
2. மத்திய அரசு அதிகாரிகளில் குறிப்பிட்ட பிரிவு அதிகாரிகள்

❖டெல்லி சிறப்பு போலீஸ் ஸ்தாபனத்தின் பணிகளை மேற்பார்வையிடுதல்

❖மத்திய அரசின் அமைச்சகங்களின் லஞ்சஒழிப்பு நிர்வாகம் மற்றும் அதிகாரிகளை மேற்பார்வையிடுதல்.

❖மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையர் இரண்டு குழுவிற்கு தலைமை வகிக்கிறார்.

டெல்லி சிறப்பு போலீஸ் ஸ்தாபனத்தின் இயக்குநர் நியமன குழு, அமலாக்க இயக்குநர் நியமனக் குழு.

❖ சிபிஐ இயக்குநரின் நியமனம் தொடர்பான கமிட்டி, இயக்குனருடன் (சிபிஐ) கலந்தாலோசித்த பிறகு, எஸ்பி மற்றும் அதற்கு மேற்பட்ட பதவிகளுக்கு அதிகாரிகளை நியமிக்க பரிந்துரைக்கும் அதிகாரம் பெற்றுள்ளது.

❖ 2013 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட லோக்பால் மற்றும் லோக் ஆயுக்தா சட்டம், CVC சட்டம் 2003 மற்றும் டெல்லி சிறப்பு காவல் ஸ்தாபன சட்டம் 1946 ஆகிய இரண்டையும் திருத்தி பின்வரும் மாற்றங்களைச் செய்துள்ளது.

1. சிபிஐயில் வழக்குத் தொடரும் இயக்குநரகத்தின் இயக்குநரை CVC பரிந்துரைகளின்படி மத்திய அரசு நியமிக்கும்.

2. மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையரைத் தலைவராகவும், 2 ஊழல் கண்காணிப்பு உறுப்பினர்கள், உள்துறை அமைச்சகத்தின் செயலாளர் மற்றும் பணியாளர் மற்றும் பயிற்சித் துறையின் செயலாளர் ஆகியோர் அடங்கிய தேர்வுக் குழுவின் பரிந்துரையின் பேரில் சிபிஐ இயக்குநர் தவிர சிபிஐயில் எஸ்பி மற்றும் அதற்கு மேற்பட்ட அதிகாரிகளை மத்திய அரசு நியமிக்கிறது.

3. குரூப் ஏ, பி, சி, டி அதிகாரிகள் மற்றும் அதிகாரிகள் தொடர்பாக லோக்பால் பரிந்துரைத்த புகார்கள் மீது விசாரணை ஆணையம் அமைத்து முதற்கட்ட விசாரணை நடத்த ஆணையத்துக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. குரூப் ஏ மற்றும் பி அதிகாரிகளின் முதற்கட்ட விசாரணை அறிக்கையை லோக்பாலுக்கு அனுப்ப வேண்டும்.

## இடித்துரைப்பாளர் பாதுகாப்பு சட்டம் (2014)

**இடித்துரைப்பாளர் பாதுகாப்புச் சட்டத்தின்(2014) முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:**

- இடித்துரைப்பாளர்களின் (ஊழலை அம்பலப்படுத்தும் நபர்களுக்கு வழங்கப்படும் சொல்) அடையாளத்தைப் பாதுகாப்பதற்கான ஒரு வழிமுறையை சட்டம் வழங்குகிறது. அரசாங்கத்தில் ஊழலை அல்லது பொதுப்பணித்துறை அதிகாரிகளின் முறைகேடுகளை அம்பலப்படுத்துபவர்கள் இப்போது பாதிக்கப்படுவார்கள் என்ற பயம் இல்லாமல் இருக்க முடியும்.

- எனினும், இந்தச் சட்டம் பொய்யான அல்லது அற்பமான புகார்களுக்கு இரண்டு ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை மற்றும் ரூ.30,000 வரை அபராதம் விதிக்கிறது.

## மத்திய புலனாய்வுத் துறை (CBI)

- சந்தானம் குழுவின் பரிந்துரைப்படி **1963ல்** உருவாக்கப்பட்டது
- இது பணியாளர் அமைச்சகத்தின் இணைக்கப்பட்ட அலுவலகமாக உள்ளது.
- 1941ல் உருவாக்கப்பட்ட சிறப்பு காவல் அமைப்பு CBI உடன் இணைக்கப்பட்டது.
- சந்தானம் ஊழல் தடுப்புக் குழுவால் (1962-1964) சிபிஐ அமைப்பு பரிந்துரைக்கப்பட்டது.

- இது ஒரு சட்டரீதியான அமைப்பு கிடையாது.
- தனது அதிகாரத்தினை டெல்லி சிறப்பு போலீஸ் ஸ்தாபன சட்டத்திலிருந்து (1946) பெற்றுக் கொள்கின்றது.
- ஊழல், பொருளாதார குற்றங்கள் மற்றும் தீவிரவாதத்தைத் தவிர வேறு தீவிர மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள் ஆகியவற்றில் மத்திய புலனாய்வுத் துறை விசாரணை நடத்துகிறது.

APPOLLO STUDY CENTRE

**குறிக்கோள்**

தொழில்துறை பாரபட்சமற்ற தன்மை மற்றும் நேர்மை.

**மத்திய புலனாய்வுத் துறை அமைப்பு**

தற்போது (2019), மத்திய புலனாய்வுத் துறை பின்வரும் ஏழு பிரிவுகளைக் கொண்டுள்ளது

1. ஊழல் எதிர்ப்பு பிரிவு
2. சிறப்புக் குற்றங்கள் பிரிவு
3. பொருளாதாரக் பிரிவு
4. கொள்கை மற்றும் ஒருங்கிணைப்பு பிரிவு
5. நிர்வாக பிரிவு
6. வழக்கு விசாரணை பிரிவு
7. மத்திய தடய அறிவியல் ஆய்வக பிரிவு

**அமைப்பு:**

- ❖மத்தியப் புலனாய்வு ஆணையத்தின் தலைவர் இயக்குநர் (Director). இவருக்குத் துணையாக இணை இயக்குநர். இவர்களன்றி கூட்டு இயக்குநர்கள், துணை இயக்குநர்கள், காவல்துறை மேற்பார்வையதிகாரிகள், பிற காவல் துறை அலுவலர்கள் உள்ளனர். மத்திய புலனாய்வுத் துறையில் இவர்களன்றி 5000 ஊழியர்கள், 125 வழக்குமன்றத் தொடர்புடைய குற்ற ஆய்வுத் துறை அறிஞர்கள், 250 சட்ட அதிகாரிகள் இடம் பெற்றுள்ளனர்.

- ❖லோக்பால் மற்றும் லோக் ஆயுக்தாச் சட்டம் (2013)க்குப் பிறகு, சிபிஐயின் இயக்குநரை, பிரதமர், மக்களவையின் எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் இந்திய தலைமை நீதிபதி அல்லது அவரால் பரிந்துரைக்கப்பட்ட உச்ச நீதிமன்ற நீதிபதி என மூன்று பேர் கொண்ட குழுவின் பரிந்துரையின் பேரில் மத்திய அரசு நியமிக்கிறது.

- ❖மத்திய ஊழல் கண்காணிப்புத் துறை சட்டம், 2003ன்படி, மத்திய புலனாய்வுத் துறை இயக்குனருக்கு இரண்டு ஆண்டு கால பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

**பணிகள்:**

1. நடுவண் அரசுப் பணியாளர்களுக்கு எதிரான ஊழல், கையூட்டு, முறைகேடான நடத்தை சம்பந்தப்பட்ட வழக்குகளைப் புலனாய்வு செய்தல்.
2. நிதி மற்றும் பொருளாதாரச் சட்டங்களின் விதிமீறல்கள் பற்றி விசாரித்தல்
3. தேசிய, சர்வதேச குற்றவாளிகள், குற்றவாளிக் கும்பல்கள் ஆகியவற்றின் தீவிர குற்றத் தொடர்புகளைக் கண்காணித்துப் புலனாய்வுக்குட்படுத்தல்.
4. ஊழல் எதிர்ப்பு அமைப்புகள், ஊழல் வழக்குகள் சம்பந்தப்பட்ட மாநில அமைப்புகள் ஆகியவற்றின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்.
5. மாநில அரசுகளின் வேண்டுகோளுக்கிணங்க பொது முக்கியத்துவமிக்க ஊழல் வழக்குகளை புலன் விசாரணைக்கு ஏற்றுக் கொள்ளல்.
6. குற்றப் புள்ளி விபரங்களைத் தயாரித்தல் ஊழல் குற்ற வழக்குகள் பற்றிய தகவல்களைக் கொடுத்தல்.

CBI என்பது இந்திய அரசாங்கத்தின் பல்துறை புலனாய்வு அமைப்பாகும். மேலும் ஊழல் தொடர்பான வழக்குகள், பொருளாதாரக் குற்றங்கள் மற்றும் வழக்கமான குற்ற வழக்குகள் ஆகியவற்றின் விசாரணையை மேற்கொள்கிறது. இந்தியாவில் இன்டர்போலின் ”தேசிய மத்திய பணியகமாக” சிபிஐ செயல்படுகிறது.

**முன் அனுமதி வழங்குதல் - பிரிவு 6A**

ஊழல் வழக்குகளில் சிபிஐயின் முதற்கட்ட விசாரணையை எதிர்கொள்வதிலிருந்து இணைச் செயலாளர் மற்றும் அதற்கு மேல் அதிகாரிகளுக்கு பாதுகாப்பு அளிக்கும் டெல்லி சிறப்புக் காவல் ஸ்தாபனச் சட்டத்தின் பிரிவு 6 அரசியலமைப்பின் சரத்து, 14யை மீறுவதாக உச்ச நீதிமன்ற அரசியல் சாசன அமர்வு கூறியது.

இந்த தீர்ப்பை எழுதி, ஊழல் என்பது தேசத்தின் எதிரி, ஊழல் செய்த பொது ஊழியர் எவ்வளவு உயர்ந்த பதவியில் இருந்தாலும் அவரைக் கண்டுபிடித்து, தண்டிக்க வேண்டும் என்பது 1988 ஆம் ஆண்டின் ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் அவசியமானதாகும் என்று தலைமை நீதிபதி கூறினார்.

## CBI அகாடமி

CBI அகாடமி உத்தரபிரதேச மாநிலம் காஜியாபாத்தில் 1996 முதல் செயல்படத் தொடங்கியது. முன்னதாக, புது தில்லியில் உள்ள சிபிஐ பயிற்சி மையத்தில் பயிற்சி நடத்தப்பட்டது.

மண்டல அளவில் பயிற்சி அளிக்கும் மூன்று மண்டல பயிற்சி மையங்கள் கொல்கத்தா, மும்பை மற்றும் சென்னையில் அமைந்துள்ளன.

**2023 TNPSC Group I Main Question**

வினீத் நரேன் வழக்கின் தன்மைகளை விவரித்து அவ்வழக்கின் தீர்ப்பானது இந்தியாவில் பொது ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகளில் எவ்வாறு பெரிய மாற்றத்தினை உருவாக்கியது என விவரி.

### வினீத் நரேன் வழக்கு (1997)

| | | |
|---|---|---|
| வழக்கின் பெயர் | : | வினீத் நாராயண் எஎ. இந்திய ஒன்றியம் |
| தீர்ப்பு ஆண்டு | : | 1997 |
| பிரபலமான பெயர் | : | ஜெயின் ஹவாலா வழக்கு |
| தொடர்புடைய தலைப்பு | : | சுயாட்சி மற்றும் திறமையான பிரச்சினை |

### உச்ச நீதிமன்ற தீர்ப்பு

- ❖ மத்திய கண்காணிப்பு ஆணையத்திற்கு சட்டரீதியான அந்தஸ்து வழங்கப்பட வேண்டும் என்று அது உத்தரவிட்டது.
- ❖ மத்திய புலனாய்வுப் பணியகத்தை (ஊடீஐ) ஒரு தன்னாட்சி அமைப்பாக மாற்றவும், அது திறம்படவும் திறமையாகவும் செயல்படுவதற்கும், ஒரு பாரபட்சமற்ற நிறுவனமாகப் பார்க்கப்படுவதற்கும் வழிகாட்டுதல்களை வழங்கியது.
- ❖ இது அமலாக்க இயக்குநரகம் (நுனு) தொடர்பாக இதே போன்ற வழிமுறைகளை வழங்கியது.
- ❖ மேலும், இணைச் செயலர் மற்றும் அதற்கு மேல் பதவியில் உள்ள அதிகாரிகளிடம் விசாரணை நடத்துவதற்கு முன் மத்திய அரசின் முன் அனுமதியை மத்திய புலனாய்வுத் துறை பெற வேண்டும் என்ற ஒற்றை உத்தரவு என்ற தன்னிச்சையான விதியின் செல்லுபடியையும் அது ரத்து செய்தது.

### தீர்ப்பின் தாக்கம்

- ❖ இந்த தீர்ப்பு மத்திய கண்காணிப்பு ஆணையத்துக்கு சட்டரீதியான அந்தஸ்தை வழங்கிய மத்திய கண்காணிப்பு ஆணையம் சட்டம், 2003 இயற்றப்பட்டது.

- ❖ இந்தச் சட்டத்தின் கீழ் மத்திய புலனாய்வு துறையின் ஊழல் வழக்குகளை விசாரிக்கும் பொறுப்பு மத்திய கண்காணிப்பு ஆணையத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

- ❖ மேலும், இந்தச் சட்டம் பிரிவு 14ஐ மீறுவதாகக் கூறி 2014ல் உச்ச நீதிமன்றத்தால் மீண்டும் செல்லாது என அறிவிக்கப்பட்ட ஒற்றை உத்தரவு விதியையும் மீண்டும் நிலைநாட்டியது.

## ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குனரகம் (DVAC)

ஊழல் தடுப்பிற்கான சந்தானம் குழுவின் பரிந்துரைகளின்படி, தமிழ்நாடு அரசு 1964 இல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநரகத்தையும், 1965 இல் மாநில ஊழல் கண்காணிப்பு ஆணையத்தையும் அமைத்தது. ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குனர் ஊழல் கண்காணிப்பு ஆணையத்திற்குத் தலைமை தாங்குகிறார். பொதுச் சேவைகளில் ஊழலைத் தடுப்பதில் உள்ள முக்கிய நிர்வாகப் பிரச்சனைகள் மற்றும் வெளிக்கொணரப்படும் தனி நபர் ஊழல் வழக்குகளை விசாரிக்கும் விதம் ஆகியவை குறித்து அவர் அரசுக்கு ஆலோசனை வழங்குகிறார்.

## இந்திய தலைமை கணக்கு மற்றும் தணிக்கையாளர் (CAG)

- ❖ இந்திய தணிக்கை மற்றும் கணக்கு துறை 1753 ஆம் ஆண்டு ஆங்கிலேயர் ஆட்சியின் போது உருவாக்கப்பட்டது.

**பதவியின் தனித்துவம்:**

- ❖ இவர் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுகிறார்

- ❖ இவர் சுதந்திரமாகச் செயல்படுவதற்கும், ஆட்சித் துறையின் அத்துமீறல்களிலிருந்து விடுபடுவதற்கும் அரசியல் அமைப்புச் சட்டம் (சரத்து 148) சில சிறப்பு விதிகளை வகுத்துள்ளது.

- ❖ அவர் பொது நிதியின் பாதுகாவலராக உள்ளார் மற்றும் நாட்டின் முழு நிதி அமைப்பையும் மத்திய மற்றும் மாநிலம் ஆகிய இரு நிலைகளிலும் கட்டுப்படுத்துகிறார்.

- ❖ இந்திய அரசியலமைப்பின் கீழ் மிக முக்கியமான அதிகாரியாக CAG இருக்க வேண்டும் என்று டாக்டர் பி ஆர் அம்பேத்கர் கூறியதற்கு இதுவே காரணம்.

- ❖ இந்திய தணிக்கை மற்றும் கணக்குத் துறை 1753 ஆம் ஆண்டு ஆங்கிலேயர் ஆட்சியின் போது உருவாக்கப்பட்டது. பால் H ஆப்பிள்பி, இந்திய நிதி நிர்வாகம் குறித்த தனது இரண்டு அறிக்கைகளில், CAGயின் பங்கை மிகவும் விமர்சித்து, CAG அலுவலகத்தை ஒழிக்க பரிந்துரைத்தார்.

**நியமனம் மற்றும் பணிக்காலம்**

- ❖ இந்தியக் கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறை தலைவருக்குப் பூரண பணிப் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது. இவரது பதவிக் காலம் **6 ஆண்டுகள்**

**அல்லது 65 வயது வரை**. இவரைப் பதவி நீக்கம் செய்யப்பட வேண்டுமாயின் உச்சநீதி மன்ற நீதிபதியைப் பதவி நீக்கம் செய்வதற்கான முறையைப் பின்பற்ற வேண்டும்.

**கடமைகள் மற்றும் அதிகாரங்கள்**

❖ பாராளுமன்றம் CAG (கடமைகள், அதிகாரங்கள் மற்றும் சேவை நிலைமைகள்) சட்டம், 1971ஐ இயற்றியது. இந்தச் சட்டம் 1976 இல் மத்திய அரசாங்கத்தில் கணக்குகளை தணிக்கையிலிருந்து பிரிக்கும் வகையில் திருத்தப்பட்டது.

❖ அவர் நாடாளுமன்றத்தின் பொதுக் கணக்குக் குழுவின் வழிகாட்டியாகவும், நண்பராகவும், அறிவுரை வழங்குபவராகவும் செயல்படுகிறார்.

**பங்கு**

❖ இந்தியக் கணக்காய்வு மற்றும் தணிக்கைத் தலைவர் இரு துறைகளுக்குத் தலைவராக உள்ளனர்

1. கணக்காய்வுத் துறை
2. தணிக்கைத் துறை

❖ இரகசிய சேவை செலவு என்பது CAGயின் தணிக்கைப் பாத்திரத்தின் மீதான வரம்பாக உள்ளது. இது சம்பந்தமாக, நிர்வாக முகமைகளால் செய்யப்பட்ட செலவினங்களின் விவரங்களை CAG பெற முடியாது, ஆனால் தகுதியான நிர்வாக அதிகாரியிலமிருந்து அவரது அதிகாரத்தின் கீழ் செலவு செய்யப்பட்டதற்கான சான்றிதழை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**இந்தியாவின் தலைமை கணக்கு மற்றும் தணிக்கையாளர்கள்**

| | **பெயர்** | **பதவிக்காலம்** |
|---|---|---|
| 1 | வி. நர்ஹரி ராவ் | 1948 – 1954 |
| 2 | ஏ.கே. சந்தா | 1954 – 1960 |
| 3 | ஞர் ஏ.கே. ராய் | 1960 – 1966 |
| 4 | எஸ்.ரங்கநாதன் | 1966 – 1972 |
| 5 | ஏ. பக்ஸி | 1972 – 1978 |
| 6 | ஜியான் பிரகாஷ் | 1978 – 1984 |
| 7 | டி.என். சதுர்வேதி | 1984 – 1990 |
| 8 | சி.ஜி. சோமியா | 1990 – 1996 |
| 9 | வி.கே. ஷுங்லு | 1996 – 2002 |
| 10 | வி.என். கவுல் | 2002 – 2008 |
| 11 | வினோத் ராய் | 2008 – 2013 |
| 12 | சஷிகாந்த் சர்மா | 2013 – 2017 |
| 13 | ராஜீவ் மஹரிஷி | 2017 – 2020 |
| 14 | ஜி.சி. முர்மு | 2020 – தற்போது வரை |

## லோக் அதாலத்

- ❖ முதல் லோக் அதாலத் 1982ல் குஜராத் மாநிலம் ஜூனாகத் மாவட்டத்தில் உள்ள உனா நகரில் நடைபெற்றது.
- ❖ 1987-ல் அறிமுகப்படுத்தப்பட்டது. முதல் மாநிலம் - குஜராத்
- ❖ இந்தியாவில் தகராறு தீர்ப்பதற்கான மாற்று அமைப்பாகும். இவை "மக்கள் நீதிமன்றம்" என அழைக்கப்படுகின்றன.
- ❖ இவை மகாத்மா காந்தியின் கொள்கையின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது.
- ❖ இந்த அமைப்புகள் பொதுவாக ஓய்வுபெற்ற நீதிபதிகள், சமூக சேவகர்கள் (அ) சட்ட தொழிலை கொண்டவர்களால் தலைமையிடப்படுகின்றது.
- ❖ இவை பொதுவாக அனைத்து சிவில் வழக்குகள் திருமணப் பிரச்சனைகள், நிலத்தகராறு, தொழிலாளர்கள் தகராறு போன்றவற்றை தீர்க்க பயன்படுகின்றது.
- ❖ லோக் அதாலத் **சிவில் நீதிமன்றத்திற்கான அதிகாரம்** பெற்றுள்ளன.
- ❖ இதில் வழங்கப்படும் தீர்ப்பு இறுதியானது, மேல் முறையீடு செய்ய முடியாது. ஏனெனில் இவற்றில் சம்மதத்தின் பேரில் தீர்ப்பு வழங்கப்படுகின்றன.

**ஊழல் எதிர்ப்புச் சட்டங்கள்:**

- ❖இந்திய தண்டனைச் சட்டம், 1860
- ❖குற்றவியல் நடைமுறை விதித்தொகுப்பு, 1973
- ❖வருமான வரி சட்டத்தின் வழக்கு பிரிவு, 1961
- ❖ஊழல் தடுப்புச்சட்டம், 1988
- ❖பணமோசடி தடுப்புச் சட்டம், 2002

**குறிப்பிட்ட ஊழல் எதிர்ப்பு சட்டங்கள்:**

- ❖தகவல் உரிமைச் சட்டம், 2005
- ❖ஊழல் எதிர்ப்பு குறைகள் மற்றும் தகவல் தெரிவிப்பவர் பாதுகாப்பு மசோதா, 2010
- ❖நீதித்துறை பொறுப்புடைமை மசோதா, 2010
- ❖லோக்பால் மசோதா, 2013
- ❖இடித்துரைப்பாளர்களுக்கான பாதுகாப்புச் சட்டம் 2014

## தகவல் அறியும் உரிமை (RTI)

**தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005**

## 1. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் தோற்றம்

- 1986 ஆம் ஆண்டு திரு. குல்வால் எதிர் ஜெய்ப்பூர் மாநகராட்சி வழக்கில், அரசியலமைப்பின் 19 வது பிரிவின் கீழ் வழங்கப்பட்ட பேச்சு மற்றும் கருத்து சுதந்திரம் என்பது தகவல் அறியும் உரிமையை தெளிவாகக் குறிக்கிறது, ஏனெனில் தகவல் இல்லாமல் பேச்சு மற்றும் கருத்து சுதந்திரத்தை குடிமக்கள் முழுமையாகப் பயன்படுத்த முடியாது என்று அது உத்தரவிட்டது.

- இந்த சட்டம் 15 ஜுன் 2005 அன்று பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டது மற்றும் 12 அக்டோபர் 2005 முதல் நடைமுறைக்கு வந்தது. இது அரசியலமைப்பின் சரத்து 19 (சுதந்திரத்திற்கான உரிமை) மற்றும் சரத்து 21 (வாழ்வதற்கான மற்றும் தனிமனித சுதந்திரத்திற்கான உரிமை) ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது. இந்தியாவில் தகவல்களை வெளியிடுதல் அதிகாரபூர்வ ரகசியங்கள் சட்டம் 1923 மற்றும் பல்வேறு சிறப்பு சட்டங்களால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது, இவற்றை புதிய RTI சட்டம் தளர்த்தியுள்ளது. இது குடிமக்களுக்கு ஒரு புதிய அடிப்படை உரிமையை வழங்குகிறது.
- ஷாஹித் ராசா பர்னி என்ற நபர் அக்டோபர் 12, 2005 அன்று புனேவில் உள்ள காவல்நிலையத்தில் முதல் RTI தாக்கல் செய்தார்.

## 2. தகவல் அறியும் உரிமை சட்டத்திற்கான காரணங்கள்

தகவல் சட்டத்தை நிறைவேற்றுவதற்கான காரணங்கள் பின்வருமாறு:

1. ஊழல் மற்றும் ஊழல்கள்
2. நவீனமயமாக்கல் மற்றும் தகவல் சமூகம்

## 3. சட்டத்தின் நோக்கங்கள்

1. குடிமக்களுக்கு அதிகாரம் அளித்தல்.
2. வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வை மேம்படுத்துதல்.
3. ஊழலைக் கட்டுப்படுத்துவது மற்றும்
4. ஜனநாயக செயல்பாட்டில் மக்களின் பங்களிப்பை மேம்படுத்துதல்.

## 4. சட்டத்தின் அம்சங்கள்

1. வேலை, ஆவணங்கள், பதிவுகளை ஆய்வு செய்தல்
2. ஆவணங்கள் அல்லது பதிவுகளின் சுருக்கங்கள் அல்லது சான்றளிக்கப்பட்ட பிரதிகளின்
3. குறிப்புகளை எடுத்துக்கொள்வது
4. சான்றளிக்கப்பட்ட மாதிரிகளை எடுத்துக்கொள்வது.

## 5. பொது அதிகாரம் என்றால் என்ன?

"பொது அதிகாரம்" என்பது உள்ளாட்சி அரசாங்கத்தால் நிறுவப்பட்ட அல்லது அமைக்கப்பட்ட எந்தவொரு அதிகாரம் அல்லது அமைப்பு அல்லது நிறுவனம்,

1. அரசியலமைப்பின் மூலம் அல்லது கீழ்


APOLLO STUDY CENTRE

2. பாராளுமன்றம்/மாநில சட்டமன்றத்தால் உருவாக்கப்பட்ட வேறு எந்த சட்டத்தின் மூலமும்.
3. அரசாங்கத்தால் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ கணிசமாக நிதியளிக்கப்படும் அரசு சாரா அமைப்பு.
4. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் பிரிவு 4-ன் படி, ஒவ்வொரு அதிகார அமைப்பும் தானாக முன்வந்து தகவல்களை வெளியிட வேண்டும்.
5. பிரிவு 8 (1),தகவல் உரிமைச் சட்டத்தின் கீழ் தகவல்களை வழங்குவதற்கு எதிரான விலக்குகளைக் குறிப்பிடுகிறது.
6. பிரிவு 8 (2),பொது நலன் கருதி அதிகாரப்பூர்வ ரகசியங்கள் சட்டம், 1923 இன் கீழ் விலக்கு அளிக்கப்பட்ட தகவலை வெளிப்படுத்த விலக்குகளை வழங்குகிறது.
7. காலக்கெடு: சாதாரண போக்கில், ஒரு விண்ணப்பதாரருக்கு, பொது அதிகார அமைப்பால் விண்ணப்பம் பெறப்பட்டதிலிருந்து 30 நாட்களுக்குள் தகவல் வழங்கப்பட வேண்டும்.

## 6. தகவல் அறியும் உரிமை சட்டம் & அதிகாரப்பூர்வ இரகசிய சட்டம்

OSA என்பது 1923 ஆம் ஆண்டு ஆங்கிலேயர்களால் சில வகையான தகவல்களை ரகசியமாக வைத்திருக்க இயற்றப்பட்டது, இதில் அரசு, இராஜதந்திரம், தேசிய பாதுகாப்பு, உளவு மற்றும் பிற அரசு ரகசியங்கள் ஆகியவையுடன் வேறு சில விதிகள் அடங்கும்.

1. இந்த இரண்டு சட்டங்களுக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டால், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் விதிமுறைகள் OSA-யின் விதிமுறைகளின் மீது முன்னுரிமை பெறுகின்றன.
2. அதேபோல, RTI சட்டத்தின் பிரிவு 8(2)ன் கீழ், பாதுகாப்பு நலனுக்கு ஏற்படும் தீங்கை விட வெளிப்படுத்துவதில் பொது நலன் அதிகமாக இருந்தால். OSA-ன் கீழ் உள்ளடக்கப்பட்ட தகவல்களை அணுகுவதற்கு ஒரு பொது அதிகாரம் அனுமதிக்கலாம்.

## 7. சமீபத்திய திருத்தங்கள்

1. தகவல் அறியும் உரிமைச் சட்ட திருத்த மசோதா 2013 அரசியல் கட்சிகளை பொது அதிகார நிறுவனங்களின் வரையறையிலிருந்தும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் வரம்பிலிருந்தும் நீக்குகிறது.
2. RTI திருத்தச் சட்டம் 2018, சுவுஜ சட்டத்தின் கீழ் சட்டப்பூர்வமாக பாதுகாக்கப்படும் மாநில மற்றும் மத்திய தகவல் ஆணையர்களின் பதவிக்காலம் மற்றும் சம்பளத்தை நிர்ணயிக்கும் அதிகாரத்தை ஒன்றிய அரசு பெறுகின்றது.

## 8. தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005-ன் அடிப்படை தகவல்கள்

- தமிழ்நாடு தகவல் அறியும் உரிமைச்சட்டம் 1997.
- தகவல் சுதந்திரச் சட்டம் 2002 -க்கு மாற்றாக உள்ளது.
- RTI சட்டம், 2005ல் இரண்டு அட்டவணைகள் உள்ளன
- இது தகவல் பெறும் உரிமையை சட்டப்பூர்வ உரிமையாக ஆக்குகிறது.
- RTI அதிகாரபூர்வ ரகசியச் சட்டம் 1923ன் கட்டுப்பாடுகளை தளர்த்துகிறது.

- 3 நிலைகள் - பொது தகவல் அதிகாரி, முதல் மேல்முறையீட்டு ஆணையம், மத்திய தகவல் ஆணையம் (CIC).
- பொதுத் தகவல் அலுவலருக்கான கால அவகாசம்: பொது அதிகாரத்தால் பெறப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் பதிலளிக்க வேண்டும்.
- முதல் மேல்முறையீட்டுக்கான அதிகபட்ச கால அவகாசம்: தகவல் வழங்குவதற்கான வரம்பு காலாவதியாகி 30 நாட்கள்.
- மேல்முறையீட்டிற்கான கால அவகாசம் : பொதுத் தகவல் அலுவலரின் பதில் பெற்ற நாளிலிருந்து 30 நாட்களுக்குள் அல்லது விதிவிலக்கான சந்தர்ப்பங்களில் 45 நாட்களுக்குள்.
- இரண்டாவது மேல்முறையீட்டுக்கான அதிகபட்ச கால அவகாசம்: தகவல் வழங்குவதற்கான வரம்பு காலாவதியாகி 90 நாட்கள்.

**மத்திய தகவல் ஆணையம்:** (CIC)

- தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, கீழ் மத்திய அரசின் பதிவிதழ் தீர்மானத்தால் உருவாக்கப்பட்டது.
- அதிக அதிகாரம் கொண்ட சுதந்திரமான அமைப்பு ஆகும்.
- எனவே, இது அரசியலமைப்பு அமைப்பு அல்ல. இது பணியாளர் அமைச்சகத்தின் கீழ் வருகிறது.

**அமைப்பு:**

- தலைமை தகவல் ஆணையர் மற்றும் அதிகபட்சம் 10 தகவல் ஆணையர்கள்
- இவர்கள் குடியரசுத்தலைவரால் பின்வரும் குழுவின் பரிந்துரையின் மூலம் நியமிக்கப்படுகின்றனர்.

    1. பிரதமர்
    2. எதிர்க்கட்சி தலைவர் (லோக்சபா)
    3. பிரதமரால் தேர்ந்தெடுக்கப்படும் மத்திய கேபினட் அமைச்சர்

தற்போது (2019), ஆணையத்தில் தலைமை தகவல் ஆணையரைத் தவிர ஆறு தகவல் ஆணையர்கள் உள்ளனர்.

**பதவிக்காலம்:**

- மத்திய தகவல் ஆணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பதவிக் காலம் 5 ஆண்டுகள் அல்லது 65 வயதாகும் வரை.
- அவர்களை மறு நியமனம் செய்ய இயலாது.
- குறிப்பு: முதல் தலைமை தகவல் ஆணையர் வஜாஹத் ஹபிபுல்லா ஆவார்.

**மாநில தகவல் ஆணையம்: (SIC)**

- தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005 கீழ் ஒவ்வொரு மாநிலத்திலும் அரசுப்பதிவிதழ் தீர்மானம் மூலம் ஒரு மாநில தகவல் ஆணையம் எற்படுத்த அதிகாரமளித்துள்ளது.

**அமைப்பு:**

❖ மாநில தலைமை தகவல் ஆணையர் + அதிகபட்சம் 10 மாநில தகவல் ஆணையர்கள்.
❖ இவர்கள் ஆளுநரால் கீழ்கண்ட குழுவின் பரிந்துரையின் படி நியமிக்கப்படுகின்றனர்.

1. முதலமைச்சர்
2. சட்டமன்ற கீழவை எதிர்க்கட்சி தலைவர்
3. முதலமைச்சரால் நியமிக்கப்படும் மாநில கேபினட் அமைச்சர்

**பதவிக்காலம்:**

❖65 வயது (அ) 5 வருடங்கள்
❖அவர்களை மறுநியமனம் செய்ய இயலாது.

**கீழே கொடுக்கப்பட்டுள்ளபடி ஒரு குறிப்பிட்ட காலவரம்புக்குள் பொதுத் தகவல் அலுவலரால் தகவல்கள் வழங்கப்பட வேண்டும்**

❖ விண்ணப்பித்த நாளிலிருந்து 30 நாட்கள்
❖ நபரின் வாழ்க்கை மற்றும் சுதந்திரம் தொடர்பான தகவல்களுக்கு 48 மணிநேரம்
❖ உதவிப் பொதுத் தகவல் அலுவலரிடம் தகவலுக்கான விண்ணப்பம் வழங்கப்பட்டால், மேற்கண்ட காலவரம்புடன் 5 நாட்கள் சேர்க்கப்படும்.
❖ மூன்றாம் தரப்பினர் சம்பந்தப்பட்டிருந்தால், கால வரம்பு 40 நாட்கள் ஆகும் (அதிகபட்ச காலம் + மூன்றாம் தரப்பினர் பிரதிநிதித்துவம் செய்ய வழங்கப்படும் கால அவகாசம்).

**குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் தகவலை வழங்கத் தவறினால், அது மறுக்கப்பட்டதாகக் கருதப்படுகிறது. அதற்கான காரணங்கள்**

❖ அதை வெளிப்படுத்துவதில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டிருப்பது.
❖ அரசைத் தவிர வேறு எந்த தனி நபரின் காப்புரிமையை மீறுவது.

**கட்டணம்**

❖ விண்ணப்பக் கட்டணங்கள் நியாயமானதாக இருக்க வேண்டும்.
❖ வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் மக்களிடம் இருந்து கட்டணம் வசூலிக்கப்படக்கூடாது.
❖ பொது தகவல் அதிகாரி கால வரம்பிற்குள் தகவல் வழங்கத் தவறினால், விண்ணப்பதாரருக்குத் தகவல் இலவசமாக வழங்கப்பட வேண்டும்.

**தகவல் அறியும் உரிமை திருத்தச் சட்டம், 2019**

❖ தலைமைத் தகவல் ஆணையர், மாநிலத் தலைமைத் தகவல் ஆணையர் மற்றும் பிற தகவல் ஆணையர் ஆகியோர் மத்திய அரசால் பரிந்துரைக்கப்பட்ட காலம் வரை பதவியில் இருப்பர்.

❖ அவர்களின் சம்பளம், படிகள் மற்றும் இதர பணி நிபந்தனைகள் மத்திய அரசால் நிர்ணயம் செய்யப்படும்.

**தேசிய புலனாய்வு முகமை**

தேசிய புலனாய்வு முகமை சட்டம், 2008 (NIA சட்டம்) விதிகளின் கீழ் 2009 ஆம் ஆண்டு தேசிய புலனாய்வு முகமை (NIA) உருவாக்கப்பட்டது. இது நாட்டின் பயங்கரவாத எதிர்ப்பு சட்ட அமலாக்க நிறுவனமாகும்.

26/11 சம்பவங்கள் என பிரபலமாக அறியப்பட்ட 2008ம் ஆண்டின் மும்பை பயங்கரவாத தாக்குதல்களின் பின்னணியில் தேசிய புலனாய்வு அமைப்பு நிறுவப்பட்டது. இது தேசிய பயங்கரவாதம், நாட்டில் பயங்கரவாத சம்பந்தப்பட்ட குற்றங்களைக் கையாள தனியாக ஒரு மத்திய நிறுவனம் தேவை என்பதை உணர வழிவகுத்தது.

தேசிய புலனாய்வு முகமையின் தலைமையகம் புது தில்லியில் உள்ளது. ஹைதராபாத், குவஹாத்தி, மும்பை, லக்னோ, கொச்சி, கொல்கத்தா, ஜம்மு மற்றும் ராய்பூர் ஆகிய நகரங்களில் NIA கிளை அலுவலகங்கள் அமைந்துள்ளன.

இந்திய அரசின் உள்துறை அமைச்சகத்தின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் தேசிய புலனாய்வு முகமை செயல்படுகிறது.

**நிர்வாக தீர்ப்பாயங்கள்**

❖ இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்த போது (1950) அதில் தீர்ப்பாயங்கள் இடம் பெறவில்லை. இருபத்தாறு ஆண்டுகளுக்குப் பின்னர் 1976 ஆம் ஆண்டு செய்யப்பட்ட 42வது சட்ட திருத்தத்தின் மூலம் **(Part XIV –A)** தீர்ப்பாயங்கள் தோற்றுவிக்கப்பட்டன. இவை நிர்வாகத் தீர்ப்பாயங்கள் என்று அழைக்கப்படுகின்றன. (சரத்து 323 A) நிர்வாகத் தீர்ப்பாயங்கள் மூன்று வகைப்படும்.
    1. மத்திய நிர்வாகத் தீர்ப்பாயம் (Central Administrative Tribunal)
    2. மாநில நிர்வாகத் தீர்ப்பாயங்கள் (State Administrative Tribunals)
    3. பிற தீர்ப்பாயங்கள் (Tribunals for other Matters, **சரத்து 323 B**)

**மத்திய நிர்வாக தீர்ப்பாயம் (CAT)**

❖ நிர்வாக தீர்ப்பாயங்கள் சட்டம், 1985ன் கீழ் டெல்லியில் முதன்மை அமர்வு மற்றும் பல்வேறு மாநிலங்களில் கூடுதல் அமர்வுகளுடன் 1985 இல் இது அமைக்கப்பட்டது. தற்போது, 17 அமர்வுகள் உள்ளன, அவற்றில் 15 உயர் நீதிமன்றங்களின் முதன்மை இருக்கைகளிலும், மீதமுள்ள இரண்டு அமர்வுகள் ஜெய்ப்பூர் மற்றும் லக்னோவிலும் செயல்படுகின்றன. இந்த அமர்வுகள் உயர் நீதிமன்றங்களின் மற்ற இடங்களிலும் சுற்று அமர்வுகளை நடத்துகின்றன.

**அமைப்பு**

❖ மத்திய நிர்வாகத் தீர்ப்பாயம் பல உறுப்பினர் அமைப்பாகும். இதில் தலைவர், துணை தலைவர், உறுப்பினர்கள் உள்ளனர். தற்போது தலைவர் (Chairman)

65 உறுப்பினர்கள் இடம் பெற்றுள்ளனர். இவர்கள் அனைவரும் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுகின்றனர். 2006 சட்டத்திருத்தத்தின் மூலம் உயர்நீதிமன்ற நீதிபதிக்கு இணையான அந்தஸ்து பெற்றனர். இவர்களது பதவிக் காலம் **5 ஆண்டுகள்** அல்லது 65 வயது நிறைவடையும்வரை தலைவருக்கு, உறுப்பினர்களாக இருந்தால் 62 ஆண்டுகள். இவர்கள் பதவி ஓய்வுக்குப் பின் மீண்டும் பதவி வகிக்க முடியாது. இந்த விதி இவர்களது செயல் சுதந்திரத்தையும் நடுநிலை தவறாமையையும் உறுதி செய்வதற்காகச் சேர்க்கப்பட்டுள்ளது.

**மாநில நிர்வாக தீர்ப்பாயங்கள்:**

❖2019 – **9 மாநிலங்களில்** அமைக்கப்பட்டுள்ளது.

❖ஆந்திரபிரதேசம், ஹிமாச்சல பிரதேசம், ஒடிசா, கர்நாடகா, மத்திய பிரதேசம், மகாராஷ்டிரா, தமிழ்நாடு, மேற்கு வங்காளம், கேரளா.

❖எனினும் **மத்திய பிரதேசம், தமிழ்நாடு, ஹிமாச்சல பிரதேசத்தில்** ஒழிக்கப்பட்டது.

❖கேரளாவில் 26 ஆகஸ்டு 2010 அமைக்கப்பட்டது.

## நிர்வாக சீர்த்திருத்தங்கள்

| **ஆணையம், குழு, அறிக்கை** | **வருடம்** | **தலைவர்** | **பரிந்துரை, முக்கிய அம்சம்** |
|---|---|---|---|
| செயலக மறுசீரமைப்பு குழு | 1947 | கிரிஷா சங்கர் பாஜ்பாய் | |
| முதல் ஊதிய குழு | 1947 | வரதாசாரியார் | |
| பொருளாதார குழு | 1948 | கஸ்தூரிபாய் லால்பாய் | |
| அரசு மறுசிரமைப்பு குழு | 1959 | N. கோபால சாமி அய்யங்கார் | அமைப்பு மற்றும் முறை பிரிவு |
| கோர்வேலா குழு | 1951 | A.D. கோர்வேலா | |
| ஆப்பிள்பை அறிக்கை – I | 1953 | பால் H. ஆப்பிள்பை | |
| அசோக் சந்த்ரா அறிக்கை | 1954 | அசோக் சந்த்ரா | |
| ஆப்பிள்பை அறிக்கை – II | 1956 | பால் ஆப்பிள்பை | |
| பொது பணிகள் (ஆட்சேர்ப்பு தகுதி குழு) | 1956 | A.R. முதலியார் | |
| பல்வந்த்ராய் G. மேத்தா குழு | 1957 | பல்வந்த்ராய் மேத்தா | 3 அடுக்கு பஞ்சாத்து முறை |
| இரண்டாவது ஊதிய | 1959 | ஜெகநாத் தாஸ் | |

| | | | |
|---|---|---|---|
| குழு | | | |
| இந்திய மற்றும் மாநில நிர்வாக பணிகள் அறிக்கை | 1962 | V.T. கிருஷ்ணமாச்சாரி | |
| சந்தானம் குழுவின் அறிக்கை | 1962-64 | K. சந்தானம் | CVC (1964) CBI (1963) |
| முதல் நிர்வாக சீர்திருத்தக் குழு | 1966 - 70 | மொராஜி தேசாய் (பிறகு 1967ல் ஹனுமந்தையா பதவி யேற்றல்) | 20 முக்கிய அறிக்கைகள் 33 அறிக்கைகள், 580 பரிந்துரைகள் லோக்பாலை பரிந்துரை செய்தது |
| மூன்றாவது ஊதிய குழு | 1973 | ரகுபர் டயல் | |
| நிர்வாகத்தில் திறனை மேம்படுத்துவதற்கான குறிப்புகள் | 1975 | L.P. சிங் L.K. ஜிஹா (L.K. Jha) | |
| ஆட்சேர்ப்பு கொள்கை மற்றும் தேர்ந்தெடுக்கும் முறைக்கான குழு | 1976 | D.S. கோத்தாரி | இரண்டு நிலை ஆட்சி பணி தேர்வு<br>முதல் : முதல்நிலை<br>இரண்டு: முதன்மை தேர்வு (எழுத்து மற்றும் நேர்காணல்) |
| பஞ்சாயத்து ராஜ் நிறுவன குழு | 1978 | அசோக் மேத்தா | இரண்டு நிலை பஞ்சாயத்துகள் |
| பொருளாதார சீர்திருத்த குழு | 1980S | L.K. ஜிஹா | |
| மத்திய மாநில உறவுகளுக்கான ஆணையம் | 1983-87 | R.S சர்க்காரியா | 247 பரிந்துரைகள் மாநிலங்களுக்கிடையேயான (அவை) மன்றம் உருவாகுதல் |
| நான்காம் ஊதிய குழு | 1986 | நீதியரசர் சிங்கால் | |
| அனைத்திந்திய குடிமையியல் பணி ஆட்சேர்ப்பு கொள்கை மற்றும் தேர்ந்தெடுக்கும் முறைக்கான குழு | 1988-89 | சத்தீஸ் சந்திரா | |
| ஐந்தாவது ஊதிய குழு | 1997 | நீதியரசர் S. ரத்னவேல் பாண்டியன் | |
| நிர்வாக மறுசீரமைப்பு குழு - II | 2005 அறிக்கை 2009 | வீரப்ப மொய்லி | e - ஆளுமை |
| ஆறாவது ஊதிய குழு | நிறுவுதல் 2006 அறிக்கை 2008 | B.N. ஸ்ரீ கிருஷ்ணன் | |

| | | | |
|---|---|---|---|
| மத்திய மாநில உறவுகள் ஆணையம் | 2007-2010 | நீதியரசர் புன்சி | |
| ஏழாவது ஊதிய குழு | 2013 அறிக்கை 2016 | நீதியரசர் A.K.மாத்தூர் | 23.55% ஊதிய உயர்வு |

**நிர்வாக சீர்திருத்த குழுவின் முக்கிய பரிந்துரைகள்:**
**மத்திய மாநில உறவுகள்:**

- மாநிலங்களுக்கிடையேயான மன்றம் (Inter-state Council) அமைத்தல். (சரத்து 263)
- ஆளுநர் திறமையும், நடுநிலை தவறாமையும், சுதந்திரமாகச் செயல்படுபவராகவும் இருக்க வேண்டும். இவர் அரசியல் அமைப்புச் சட்டத்துக்கு விசுவாசமாக இருக்க வேண்டுமேயன்றி நடுவண் அரசின் முகவராக இருக்கக் கூாது.
- மாநிலங்களுக்கு மிகப்பரந்த அதிகாரமளித்தல்.
- மத்திய அரசினை சார்ந்திருப்பதை குறைக்க மாநிலங்களுக்கு அதிக அளவு நிதி வளங்கள் கொடுத்தல்.
- மாநிலங்களில் அவற்றின் பரிந்துரை (அ) மற்ற காரணங்களுக்காக மத்திய பாதுகாப்பு படையை பயன்படுத்தல்

**அரசியல் மற்றும் நிரந்தர நிர்வாகிகளுக்கிடையேயான உறவுகள்:**

- அமைச்சர் மூத்த அலுவலர்கள் மத்தியில் அச்சமற்ற மற்றும் நியாயமான சூழ்நிலையை வளர்க்க முயற்சிக்க வேண்டும்.
- அமைச்சர் நிர்வாக முறைகேடுகளை தவிர அன்றாட அலுவல்களில் தலையிடக் கூடாது.
- அமைச்சர் மற்றும் செயலருக்கிடையேயான உறவு மிகவும் **நம்பிக்கை** கொண்டதாக இருக்க வேண்டும்.
- ஏதேனும் உறவு சீற்குலைவு ஏற்படின் பிரதம மந்திரி அதை சரிசெய்ய தனிக்கவனம் செலுத்த வேண்டும்.
- அனைத்து முக்கிய முடிவுகளும் சுருக்கமான எழுத்து வடிவில் கொண்டு வரப்பட வேண்டும்.
- ஆரோக்கியமற்ற தனிப்பட்ட உறவுகளை தடுக்க / வளர்க்க பிரதமர் சிறப்பு அக்கறை எடுக்க வேண்டும்.
- நிரந்தர நிர்வாகிகள் நடுநிலைமை மற்றும் மறைவொழுக்க கொள்கைக்கு இணங்கி நடக்க வேண்டும்